# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TITTAGUDI.

**CC.No.36-2023** **L.W.2** **P.W.2**

| Name | திரு.அமரகவி | Father / Husband Name | ரெங்கநாதன் |
|---|---|---|---|
| Village | திட்டக்குடி | Taluk | திட்டக்குடி |
| District | கடலூர் | Age | 64 |
| | | Time | 5.25 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, விதி முறைகளின் படி 19.02.2026 நாளாகிய இன்று திருமதி.B.ஹரிணி பிரியா பி.எ., எல்.எல்.பி., (Hons)., நீதித்துறை நடுவர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டது. சாட்சி உண்மையாக சொல்கிறேன் என சத்திய பிரமாணம் செய்கிறார்.

***2, 3 எதிரிகள் ஆஜர், 1 வது எதிரி ஆஜரில்லை, 1 வது எதிரி அடையாளம் குறித்து எதிரி தரப்பு வழக்கறிஞருக்கு ஆட்ச்சேபனை எதுவுமில்லை. வழக்கறிஞர் ஆஜர்,***

**1.**நான் திட்டக்குடியில் வசித்து வருகிறேன். அசா.1 எனது மனைவி ஆவார். ஆஜர் எதிரி–களை எனக்கு தெரியும். அவர்கள் எனக்கு உறவுக்காரர்கள் ஆவார்கள். ஆஜரில்லா 1 வது எதிரி தேவேந்திரனை எனக்கு தெரியும். கடந்த 25–12–2020 அன்று காலை 7.30 மணியளவில் நான்கடைதெருவிற்கு சென்றேன். நான் கடைதெரு செல்வதற்கு எதிரியான ஞானசேகரின்கடையை தாண்டிதான் செல்லவேண்டும். எங்களுக்கும் எதிரி ஞானசேகருக்கும் இடம் சம்மந்தமாக பிரச்சனை இருந்தது வருகிறது. அப்போது ஞானசேரகரின் மகன் தேவேந்திரன் வெளிநாட்டில் இருந்து வந்திருந்தார். அவர் வெளிநாட்டில் இருந்து வந்த விபரம் எனக்கு தெரியாது. நான் எப்போதும் கடைக்கு போவதுபோல நடந்துபோனேன். அப்போது எதிரி ஞானசேகரன் என்னை பார்த்து அசிங்கமாக தகாத வார்த்தைகளான தேவடியா பய மகன் போரான் வாடா குச்சிகாரி மகன் போரான் என்று என்னை திட்டி அவர் மகனான தேவேந்திரனை வெளியில் வாடா என்று கூறினார். மீண்டும் என்னை ஞானசேகர் திட்டிக்கொண்டே கடையில் இருந்து வெளியே வந்து உன்னால் அந்த இடத்தில் வீடு கட்டமுடியாது என்றும், அதை தடுக்க முடியாது என்றும், எனக்கு போலிஸ் ஆதரவு மற்றும் அடியாட்கள் ஆதரவு உள்ளது என்று கூறி என் சட்டையை பிடித்து இழுத்து என்னை

பின்னால் தள்ளினார், நான் அதை எதிர்த்து நின்னேன். அப்போது எதிரி ஞானசேகரன் அருகில் இருந்த தள்ளுவண்டி இட்லி கடையில இருந்து ஒரு கட்டையை எடுத்து என் தலையில் அடித்தார். கொன்றுவிடுவேன் என்று கொலை மிரட்டல் விடுத்தார் நான் அப்போது தள்ளுவண்டியி–லேயே சாய்ந்துவிட்டேன். பிறகு அவர் மகன் தேவேந்திரன் நகருப்பா தேவடியாபயல நான் அவனை கொன்றுவிடுவேன் என்று கூறிக்கொண்டே அவர் வைத்திருந்த கத்தியால் என்னை குத்த வந்தார் அப்போது நான் நகர்ந்துக்கொண்டேன் அந்த கத்திக்குத்தானது எனது வலது கையின் புஜத்தில் வெட்டு காயம் ஏற்பட்டது.

2. அப்போது அந்த சம்பவத்தை பார்த்த பொது மக்கள் விலக்கிவிட்டார்கள். அப்போது ஞனசேகர் மனைவி திலகவதி செருப்பால் என்னை உடம்பு முழுவதும் அடித்தார் இதற்கு முன்னால் உன்னை அடித்தது போதாதா என்று என்னை மீண்டும் செருப்பால் அடித்தார். அப்போது சம்பவத்தை தடுக்க வந்த என் மனைவி சுசிலாவை அவர் போட்டோ எடுத்தபோது அவர் போனை பிடுங்கி எதிரி தேவேந்திரன் உடைத்துவிட்டார். பிறகு என் மனைவியை திலகவதியும், தேவேந்திரனும் இடித்து கீழேதள்ளினார்கள். தேவேந்திரன் என் மனைவியை உனக்கு இங்க என்னடி வேல தேவடியா என அசிங்மாக திட்டினார். தடுக்க போன என்னை எதிரி தேவேந்திரனும், ஞானசேரும் என்னை நெஞ்சில் குத்தினார்கள் நான்இருதய அறுவை சிகிச்சை செய்திருந்ததால் நான் வலிதாங்க முடியாமல் தள்ளிபோயிவிட்டேன் பிறகு என் மனைவியை தேவேந்திரன், ஞானசேகர், திலகவதி ஆகிய மூன்றுபேரும் சேர்ந்துக்கொண்டு கீழேத்தள்ளி காலால் உதைதார்கள்.

3. அங்கிருந்த நபர்கள் சண்டையை விலக்கிவிட்டு தலையில் கையில் ரத்தம் வந்தததால் என்னை மருத்துவமனைக்கு செல்லுங்கள் என்று கூறியதால் நான் திட்டக்குடி அரசு மருத்துவமனைக்குசென்றேன். எனக்கு தலையில் அடிப்பட்டு இருந்ததால் திட்டக்குடி அரசு மருத்துவமனையில் போதிய மருத்துவ வசதி இல்லாததலர் பெரம்பலூர் அரசு மருத்துவ மனைக்கு என்னை அனுப்பிவைத்தார்கள். இந்த வழக்கு சம்மந்தமாக போலிஸார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. சம்பவத்தை விலக்கி விட்ட நபர்கள் சுமார் 5 லிருந்து 10 நபர்கள் இருப்பார்கள். இந்த 10 நபர்களும் சம்பவ இடத்தின் அருகில் உள்ள குடியிருப்பு வாசிகள் என்றால் ? இல்லை அவர்கள் வழிப்போக்கார்கள். சம்பவம் எவ்வளவுநேரம் நடந்தது என்றால் ? சுமார் 10 லிருந்து 15 நிமிடங்கள் நடந்தது. 7.30மணியிலிருந்து 7.45 மணி வரை நடந்திருக்குமா என்றால் ? நடந்திருக்கலாம். 7.45 மணி வரைக்கும் அந்த பிள்ளையார்கோவில் அருகேதான் இருந்தேனா என்றால் ? ஆமாம். சம்பவ இடத்திற்கும் என்னுடைய வீட்டிற்கும் இடையே எத்தனை வீடுகள் இருக்கும் என்றால் ? நான் அதை எண்ணி பார்க்கவில்லை சுமார் 10 லிருந்து 15 வீடுகள் இருக்கும். சண்டை நடந்த இடம்

குடியிருப்பு பகுதியா என்றால் ? ஆமாம். நான் பெரம்பலூர் அரசு மருத்துவ மனைக்கு எத்தனை மணிக்குசென்றேன் என்றால் ? 11.30 மணியிலிருந்து 12.00 மணிக்கு மேல் இருக்கும். சண்டை சம்மந்தமாக நான் எந்த புகாரும் காவல் நிலையத்தில் கொடுக்கவில்லை என்றால் ? சரிதான்.

2. **அசா.ஆ.1** புகாரை நான்தான் தயார்செய்து என் மனைவியிடம்கொடுத்து அனுப்பினேன். பெரம்பலூர் அரசு மருத்துவ மனையில் தட்டச்சு செய்வதற்கு வசதிகள் ஏதும் இல்லை என்றால் ? எனக்கு தெரியாது. இவ்வழக்கின் **அசா.ஆ.1** புகாரை நான்தான் கையால் எழுதிக்கொடுத்தேனா என்றால் ? இல்லை. இன்னொருவரிடம் சொல்லி எழுதச்சொன்னேன். **அசா.ஆ.1** புகாரை யார் எழுத–ியது என்ற விபரத்தை போலிஸாரின் விசாரணையில் சொல்லியிுள்ளேனா என்றால் ? என்னிடம் கேட்கவில்லை நான்சொல்லவும் இல்லை. நான் சிகிச்சையில் இருந்தபோது போலிஸார் என்னிடம் எந்த வாக்குமூலமும் பதிவுசெய்யவில்லை. சிகிச்சைக்காக மருத்துவமனை சென்றபோது மருத்துவரிடம் நான்தான் வாக்குமூலம் அளித்தேன் என்றால் ? ஆமாம். எனக்கு காவல் நிலையத்தில் புகார் அளிக்கும் பழக்கம் உண்டு என்றால் ? இல்லை இதுதான் முதல் வழக்கு.

3. சம்பவ இடத்திலிருந்து மருத்துவமனைக்கு நான் காவல் நிலையம் கடந்துதான் செல்லவேண்டும் என்றால் ? சரிதான். நான் சம்பவ தினத்தன்று மருத்துவமனைக்கு செல்லும் வழியல்நான் காவல் நிலையத்தில் புகார் எதுவும் அளிக்கவில்லை என்றால் ? சரிதான். எதிரிகள் என்னை தாக்கியபோது ரத்தம் வந்ததா என்றால் ? ரத்தம் வந்தது. இதனால் சட்டை நினைந்தது. சம்பவததின் போது ரத்தம் நனைந்த சட்டையை போலிஸாரிடம் ஒப்படைத்ததேனா என்றால் ? போலிஸார் கேட்கவுமில்லை நான் ஒப்படைக்கவுமில்லை. எனக்கு கத்திக்கும் அரிவாளுக்கும் வித்தியாசம் தெரியும். முள்ளுகுச்சிக்கும் கட்டைக்கும் வித்தியாசம் தெரியும். இந்தவழக்கு சம்மந்மதாக போலிஸார் என்னை இரண்டு நாட்கள் கழித்து என் வீட்டில் வைத்து விசாரித்தார்கள். வேறு எங்கும் வைத்து விசாரித்தாகளாள ன்றால் ? காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். 1 வது எதிரி என்னுடைய மனைவியின் போனை உடைத்துவிட்டதாக சொல்லியுள்ளேன் அது எந்த கம்பெனியின் போன் என்பதைபோலிஸாரிடம் சொல்லவுமில்லை, உடைந்த போனை போலிஸாரிடம் ஒப்படைக்கவுமில்லை என்றால் ? சரிதான். **அ.சா.ஆ.1** புகாரைநான்தான் தயார்செய்தேன் என்று சாட்சி சொல்லிவிட்டு எழுதியது யார் என்று கேட்டதற்கு எனக்கு தெரிந்த நபரான செல்வம் என்பவர் நான்சொல்ல சொல்ல எழுதினார் என்று கூறினார்.

4. **அ.சா.ஆ.1** புகாரை எங்கே வைத்து எழுதினீர்கள் என்றால் ? திட்டக்குடியில் உள்ள ஒரு பிளாட்பாமில் வைத்து எழுதினேன். புகாரை 26 ம் தேதியன்று எழுதினேன். எனக்கு காவல் நிலையம் ரொம்ப பழக்க பட்ட இடம் என்பதால் எதிரிகளின்மீது பொய்புகார் அளித்துள்ளேன் என்றால் ? சா–ியல்ல. எதிரிகளுக்கும் இந்த குற்றச்செயலுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் ? சரியல்ல. நான்சொல்வதுபோன்று எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்று சொன்னால் ? சரியல்ல. நான்சொல்வதுபோன்று எதிரிகளால் எனக்கு காயம் ஏற்பட வில்லை என்றாலும், நானாக காயத்தை

ஏற்படுத்திக்கொண்டு எதிரிகளின் மீது ஒரு பொய்யான புகார் அளித்துள்ளதால்தான் 25 ம் தேத–ியிலிருந்து 27 ம்தேதி வரை சிகிச்சையில் இருந்த நான் 26 ம் தேதி திட்டக்குடியில் புகாரை எழுத–ியதாக சொல்லியுள்ளேன் என்றால் **?** சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

**TYPED TO MYDICTATION OPENCOURT**
**INPRESENCE OF ACCUSED READOVER**
**TO THE DEPONENT AND ADMITTED BY**
**HIM/HER TO BE CORRECT**

**JUDICIAL MAGISTRATE,**
TITTAGUDI

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TITTAGUDI.

CC.No.36-2023 L.W.1 P.W.1

| | | | |
|---|---|---|---|
| Name | திருமதி.சுசிலா | Father / Husband Name | அமரகவி |
| Village | திட்டக்குடி | Taluk | திட்டக்குடி |
| District | கடலூர் | Age | 58 |
| | | Time | 4.45 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, விதி முறைகளின் படி 19.02.2026 நாளாகிய இன்று திருமதி.B.ஹரிணி பிரியா பி.எ., எல்.எல்.பி., (Hons)., நீதித்துறை நடுவர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டது. சாட்சி உண்மையாக சொல்கிறேன் என சத்திய பிரமாணம் செய்கிறார்.

***2, 3 எதிரிகள் ஆஜர், 1 வது எதிரி ஆஜரில்லை, 1 வது எதிரி அடையாளம் குறித்துகூ எதிரி தரப்பு வழக்கறிஞருக்கு ஆடசேபனை எதுவுமில்லை. வழக்கறிஞர் ஆஜர்,***

**1.**நான் திட்டக்குடியில் வசித்து வருகிறேன். சாட்சிகள் பட்டியலில் உள்ளஅமரகவி எனது கணவர் ஆவார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவாகள் எனக்கு உறவுக்காரர்கள் ஆவார்கள். ஆஜரில்லா 1 வது எதிரி தேவேந்திரனை எனக்கு தெரியும். இவ்வழக்கின் 2 வது எதிா–ியான ஞானசேகரின் மகன் ஆவார். கடந்த 25–12–2020அன்று காலை 7.30 மணிக்கு எனது கணவர் அமரகவி பால் வாங்குவதற்காக திட்டக்குடியில்உ ள்ள பிள்ளையார்கோவில்அருகில் உள்ள முருகன் கடைக்கு சென்றார். அப்போது 1 வது எதிரி தேவேந்திரன் மற்றும் 2 ம் எதிரியான ஞானசேகரனும் சொத்தை நீதிமன்றத்திற்கு சென்றாலும் வாங்க முடியாது என்று என் கணவரிடம் தகராறுசெய்தார்கள். அப்போது என் கணவர் அவர்களிடம் நான் நீதிமன்றம் சென்று சொத்தைவாங்கிக்கொள்கிறேன் என்று கூறியுள்ளார்.

**2.** அப்போது என் கணவரை என் கணவரின் தம்பி ஞானசேகரன் சட்டையை பிடித்து பின் பக்கமாக இழுத்து கண்ணத்தில் அடித்து நெஞ்சில் குத்தியுள்ளார். என் கணவரை சட்டையை பிடித்து அடிக்கும்போதே நான் அங்குசென்றுவிட்டேன். என் கணவரை எதிரி ஞானசேகர் அருகில்கிடந்த கட்டையை எடுத்துதலையில் அடித்தார். அதனால் என் கணவருக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டு ரத்தம் வந்தது.

**3.** அப்போது தேவேந்திரன் கத்தியால் என் கணவரை குத்த வந்தபோது அவர் சற்று

விலகியதும் வலது கையில் பட்டு காயம் ஏற்பட்டது. அப்போது ஞாகசேகரனின் மனைவி திலகவதி செருப்பால் என் கணவரை அடித்தார். அப்போது அச்சம்பவத்தை போட்டோ எடுத்து என் மகனுக்கு தெரிவிக்கலாம் என்றுபோன்செய்தபோது எதிரியான தேவேந்திரன் என் போனை தட்டிவிட்டு என் போனை உடைத்துவிட்டார். என்னை தேவேந்திரன் தலையை பிடித்து தள்ளிவிட்டார். அப்போது ஞானசேகரன் என்னை உதைத்தார். திலகவதியும் என்னை உதைத்தார். அப்போது சம்பவத்தை பார்த்த முருகன் மற்றும் பன்னீர்செல்வம் விலக்கிவிட்டார்கள். அடிப்பட்ட நானும் என் கணவரும் திடடக்குடிஅரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றோம். எனது கணவருக்கு இருதய கோளாறுஇருப்பதால் இங்கு சிகிச்சை அளிக்கமுடியாது என்று சொன்னதால் பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். பிறகு நான் திட்டக்குடி காவல் நிலையம்சென்று புகார் அளித்தேன். 25–12–2020 தேதியிட்ட புகார் **அ.சா.ஆ.1** ஆகும். இந்த வழக்கு சம்மந்தமாக போலிஸார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் கையொப்பம் இட்ட **அ.சா.ஆ.1** ல் என்ன தட்டச்சுசெய்யப்பட்டுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியும். 25–12–2020 என்று நான் கையொப்பம் இட்டுள்ளேன் என்றால் ? சரிதான். சம்பவம் ஆரம்பித்த நேரம் என்வென்றால் ? சுமார் 7.30 மணியிருக்கும். தகராறு முடிந்த நேரம் என்னவென்றால் ? நேரம் நான் பார்க்கவில்லை. சுமார் அரை மணி நேரம் இருக்கும் அதற்கு மேலயும் இருக்கும், சுமார் முக்கால் மணி நேரம் இருக்கும். சம்பவ இடமானது குடியிருப்பு பகுதி என்றால் ? சரிதான். சம்பவம்நடந்த இடம் கடையின் முன்பு நடந்ததா அல்லது ரோட்டில் நடந்ததா என்றால் ? ரோட்டில்தான் நடந்தது. மேற்படி ரோடு ஆள்நடமாட்டம் அதிகம் உள்ள இடமாகும். சம்பவ சமயத்தில் ரோடு போக்குவத்து அதிகம் இருந்ததா என்றால் ? சம்பவம் காலை நேரத்தில் நடந்ததால் அவ்வளவு கூட்டம் இல்லை. சம்பவ இடத்தில் என்ன சண்டை நடந்தாலும் அருகில் இருப்பவர்களுக்கும் தெரியும் என்றால் ? தெரியும். ஆட்கள் வீட்டுக்குள்ளேயும் இருந்திருக்கலாம். சம்பவ இடத்திற்கும் என் வீட்டிற்கும் இடையே எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் ? சுமார் 10 முதல் 15 வீடுகள் தள்ளியிருக்கும் என்று சொல்லிவிட்டு சாட்சி மீண்டும்தெரியவில்லை என்று கூறினார்.

2. **அசா.ஆ.1** புகாரில் 17 வரியில் சம்பவத்தை பற்றி கேள்விப்பட்ட நான் சம்பவ இடத்திற்கு சென்றேன் என்று குறிப்பிட்டுள்ளேன்என்றால் ? சரிதான். சம்பவத்தை பற்றி யார் என்னிடம்தகவல் சொன்னார்கள் என்றால் ? எனக்கு தெரிந்தவர்தான் சொன்னார் யார் என்று நான் சரியாக கவனிக்கவில்லை. என்னுடைய கணவரை மருத்துவமனைக்கு நான்தான் அழைத்து சென்றேன். **அசா.ஆ.1** புகாரை யார் தயார்செய்தார்கள் என்றால் ? என்னுடைய கணவர்போய் எழுதிக்கொண்டு வந்தார். அந்த புகாரைதான் நான் போலிஸாரிடம் கொடுத்தேன். என்னிடம் தற்போது சமூகம் நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார்தான் என்கணவர் தயார்செய்தது. மருத்துவமனையில்

மருத்துவர் விசாரணையின்போது சம்பவத்தை பற்றி நானும் கூறினேன் என்னுடைய கணவரும் கூறினார். எனக்கு கத்திக்கும் அரிவாளுக்கும் வித்தியாசம் தெரியும், அதேபோன்று முள் குச்சிக்கும் கட்டைக்கும் வித்தியாசம் தெரியும்.

3. **அசா.ஆ.1** புகாருக்கு பிறகு இந்த சம்பவம் தொடர்பாக வேறு எந்த புகாரும் அளிக்கவில்லை என்றால் ? சரிதான். நான் புகார் அளித்த நேரம் சம்பவத்திற்கு மறுநாள் மாலை 6.00 மணியாகும். சம்பவ இடத்திலிருந்து மருத்துவமனைக்கு செல்ல திட்டக்குடி காவல் நிலையத்தை கடந்துதான்செல்லவேண்டும் என்றால் ? சரிதான். போகும் வழியில் காவல் நிலையத்தில் புகார் அளிக்கவில்லை என்றால் ? ஞாபகமில்லை. நான்சொல்வது போன்று எதிரிகள் எங்களுக்கு எதிராக எந்த வித குற்ற சம்பவத்திலும் ஈடுபடவில்லை என்று சொன்னால் ? சரியல்ல. 1 வது எதிரி என்னுடைய போனை உடைத்துவிட்டதாக சொல்லியுள்ளேன் அது எந்த கம்பெனியின் போன் என்பதைபோலிஸாரிடம் சொல்லவுமில்லை, உடைந்த போனை போலிஸாரிடம் ஒப்படைக்கவுமில்லை என்றால் ? சரிதான். இந்த வழக்கு சம்மந்மாக போலிஸார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் ? மருத்துவமனையில் இரண்டு நாட்கள் இருந்தோம் பிறகுதான் விசாரித்தார்கள். எப்போது என்று சரியாக தெரியவில்லை வீட்டில் வைத்துதான் விசாரித்தார்கள். வேறு எங்கும் வைத்து விசாரிக்கவில்லை.

4. எனது கணவருக்கு தொடர்ச்சியாக காவல் நிலையத்தில புகார்கொடுப்பதுதான் வழக்கம் என்றாலும், அக்கம் பக்கத்தில் உள்ள நபர்கள் மீதுபுகார் அளித்து அதை சாதகமாககொண்டு பணம் பறிப்பதுதான் எங்கள் வேலை என்றாலும், அதனால்தான் எதிரிகள் மீது பொய்புகார் அளித்துள்ளோம் என்றால் ? சரியல்ல. எதிரிகள் எனக்கும் என்னுடைய கணவருக்கும் எதிராக எந்தவித குற்ற சம்பவத்திலும்ஈடுபடவில்லை என்று சொன்னால் ? சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

**TYPED TO MYDICTATION OPENCOURT
INPRESENCE OF ACCUSED READOVER
TO THE DEPONENT AND ADMITTED BY
HIM/HER TO BE CORRECT**

**JUDICIAL MAGISTRATE,**
TITTAGUDI